ந.க.எண். ஆ1/2127/2018

வட்டாட்சியர் அலுவலகம்
கயத்தாறு
நாள்: 20.07.2018

**சுற்றறிக்கை**

சிறு குறு விவசாயி சான்று கோரி இணையவழி (**E-Sevai**) மூலம் விண்ணப்பிக்கும் மனுக்கள் முறையான வழிகாட்டுதலின்றி மனுதாரர்களால் விண்ணப்பிக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் விசாரணை சரிவர மேற்கொள்ளாமல் பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாகவும், மனுதாரர்கள் அலைக்கழிக்கப் படுவதாகவும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகார்கள் சென்ற வண்ணம் உள்ளதால் அனைத்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் இணையவழி மனுக்களை போதிய பரிசீலனை செய்து அனுப்பிட அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள் மற்றும் அடங்கல் ஆகியவற்றினை உடனடியாக வழங்கிடவும் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி விரைந்து நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் பெயரில் 5 ஏக்கர் புன்செய் அல்லது 2.5 ஏக்கருக்கு மிகாமல் நன்செய் நிலங்கள் உள்ளதா? என்பதை சரிபார்த்து அந்த புல எண்களுக்கான அடங்கல் மற்றும் 10(1) நகல் வழங்கிடவேண்டும். விண்ணப்பதாரரிடம் கணினி 10(1) சிட்டா நகல் இருப்பின் தற்போது உள்ளது தானா? என்பதை கிராமக்கணக்குகளுடன் சரி பார்த்து கொள்ளவேண்டும்.

2. விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு 5 ஏக்கர் புன்செய் அல்லது 2.5 ஏக்கருக்கு அதிகமாக நன்செய் நிலங்கள் இருப்பின் அவர் சிறு குறு விவசாயி சான்று பெற தகுதி இல்லாததால் அதன் விபரத்தினை மனுதாரரிடம் தெரிவித்தும், அவருக்குரிய மொத்த நில விவரங்கள் அனைத்தையும் பதிவிட்டு அடங்கல் மற்றும் 10(1) கணக்கு நகல் வழங்கிட வேண்டும்.

3. விண்ணப்பதாரருக்குரிய நிலங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாக்களில் உள்ளபோது, ஒரு சில விண்ணப்பதாரர்கள் 5 ஏக்கருக்கு கீழ் உள்ள நிலங்களுக்குரிய பட்டா மட்டுமே காண்பித்து கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் பெற்று விண்ணப்பம் செய்கின்றனர். மற்ற பட்டாக்களில் உள்ள் நிலங்களை காண்பிக்காமல் உள்ளதை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் விசாரணையிலும் தெரிவிக்கப்படாமல் பரிந்துரை செய்யப்பட்டு தவறாக சான்று வழங்கிட வழிவகை செய்யப்படுகிறது. விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் மொத்த நிலங்களையும் பட்டா வாரியாக தனித்தனியே அடங்கல் நகல்

வழங்கலாமல், ஒரே அடங்கல் நகலில் அனைத்து புலங்களையும் பதிவிட்டு வழங்கினால் மனுதாரர் உண்மை நிலையினை எளிதாக கண்டறிய வழிவகுக்கும்.

4. சான்று கோரும் விண்ணப்பதாரர் குடியிருக்கும் கிராமத்திற்கு அருகில் உள்ள கிராமங்களில் நிலம் இருப்பின் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று அந்த நிலங்களுக்குரிய அடங்கல் மற்றும் 10(1) சிட்டா நகல் பெற்று அவற்றினையும் சேர்த்து விண்ணப்பிக்க தெரிவிக்கவேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் கிரையம் பெற்று பட்டாமாறுதல் செய்யப்படாமல் உள்ள இனங்களில் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குரிய கிரைய ஆவணங்களின் நகல்கள் வில்லங்கச்சான்று நகல்களுடன் விண்ணப்பம் செய்திட மனுதாரருக்கு தெரிவிக்கவேண்டும்.

6. பெரும்பாலான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கும் நபரின் பெயரில் உள்ள நிலங்களை மட்டும் காண்பித்து சான்று கோரி வரப்பெறுகிறது. அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நிலங்களை காண்பிக்காமல் விண்ணப்பம் செய்யப்பட்டு, அவை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்படுகிறது.

(உதாரணத்திற்கு கணவர் விண்ணப்பிக்கும் போது மனைவி பெயரில் உள்ள நிலங்களை சேர்க்காமலும், மகன் விண்ணப்பிக்கும் போது தாய் தந்தை பெயரில் உள்ள நிலங்களை சேர்க்காமல் உள்ளது)

7. வில்லங்கசான்று இல்லை என தெரிவித்து வருவாய் ஆய்வாளர்களால் பெரும்பான்மையான விண்ணப்பங்கள் விசாரணை செய்யாமலே தள்ளுபடி செய்திட அறிக்கை செய்யப்படுகிறது. விசாரணையில் வில்லங்கம் உள்ளதாக தெரியவரும் இனங்களில் வருவாய் ஆய்வாளரே ecview.tnreginet.net/ இணையதளத்தில் சரிபார்த்து அறிக்கை செய்திட அறிவுறுத்தப்படு கின்றனர்.

8. சான்று கோரும் விண்ணப்பதாரர் ஏதும் புல எண்களை காண்பிக்காமல் விசாரணையின் போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் கண்டறியப்படும் புல எண்களின் விபரங்களை அந்தந்த அலுவலரே புதிதாக உள்ளீடு செய்து சேர்த்து அதனடிப்படையில் அறிக்கை செய்திட அறிவுறுத்தப்படுகின்றனர்.

9. விண்ணப்பதாரர் கூட்டுப்பட்டாதாராக இருப்பின் அந்த புல எண்களின் பரப்பில் அவருக்குரிய பங்கினை தெளிவாக குறிப்பிடவேண்டும். உதாரணத்திற்கு ஒரு புல எண்ணில் ஒரு ஏக்கரில் பாதி நிலம் அதாவது 50 செண்ட் மட்டும் விண்ணப்பதாருக்கு பாத்தியதை எனில் விண்ணப்பம் செய்துள்ள இணையபக்கத்தில் அந்த புல எண்ணிற்கு எதிரே Share Percentage கலத்தில் 50 எனவும், முழுபுலமும் அவருக்கு பாத்தியதை எனில் Share Percentage 100 என உள்ளீடு செய்யப்பட்டிருக்கவேண்டும்

10. அதே போன்று Land Type கலத்தில் புன்செய் நிலம் எனில் Dry Land எனவும், நன்செய் நிலம் எனில் Wet எனவும் உள்ளீடு செய்யப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்த்தும், தவறாக இருப்பின் விசாரணை அலுவலரே அதை சரி செய்து அடுத்த நிலை அலுவலருக்கு அனுப்பிட அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பிக்கும் மனுதாரர் அடங்கல், 10(1) சிட்டா நகல், தீர்வை ரசீது நகல், தேவைப்படும் இனங்களில் கிரைய ஆவண நகல் மற்றும் வில்லங்கசான்று, குடியிருப்பிற்கான ஆதாரம் ஆகியவற்றுடன் விண்ணப்பம் செய்துள்ளாரா? அவற்றினை சரிபார்த்து விசாரணை அறிக்கையினை விரைவாக அனுப்பிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் அனைத்து வகை இணையவழி E-Sevai மனுக்களையும் முறையாக விசாரணை செய்து ஒரு வார காலத்திற்குள் முடிவு செய்திட விரைந்து நடவடிக்கை எடுத்திட அனைத்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

வட்டாட்சியர்
கயத்தாறு

பெறுநர்

1. அனைத்து வருவாய் ஆய்வாளர்கள்
கயத்தாறு வட்டம்

2. அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள்
கயத்தாறு வட்டம் - வருவாய் ஆய்வாளர் மூலம் சார்பு செய்து

திரும்ப பெற

நகல்: வருவாய் கோட்டாட்சியர் கோவில்பட்டி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது

நகல்: மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.